# விளம்பரம்™

VLAMBARAM™

☎ 416-282-8059 ✆ 416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம்



3வது இதழ்
வெளிவந்துவிட்டது

உலக தமிழோசை


முன்னோக்கி சுற்றும்
கிரகங்கள் எவ்வாறு
பின்னோக்கி வருகிறது?



நதி 13 JANUARY 15, 2003 பாலம் 02




பொங்கல் வாழ்த்துக்கள்
- விளம்பரம் பப்ளிகேஷன்



## பொங்கல் விழா

மனித சமூகத்தின் வளர்ச்சிக் கட்டங்களை, மானிடவியலாளர்கள் பொதுவாக நான்கு கூறாகப் பிரிப்பர்.

1. ஆதிகால மனிதன்
2. விவசாய மனிதன்
3. தொழிற்சாலை மனிதன்
4. விஞ்ஞான அல்லது கணினி மனிதன்

உணவு சேகரித்த காட்டு மனிதன், உணவு உற்பத்தி செய்யும் விவசாய மனிதனாக மாறினான். மனித வர்க்கத்துக்கு அவன் கொடுத்த பெரும் பங்களிப்பு அது. இக்கால கட்டத்தில் வாழ்ந்த மக்கள் குழுமங்கள், பல்வேறு வகையான இயற்கை அமைவுகள், காலநிலைகள், புவியியல் அமைப்புகள் முதலியவற்றின் அடிப்படையிலே விழாக்களைக் கொண்டாடினார்கள். இப்பண்பாட்டு வெளிப்பாடான விழாக்கள் வெவ்வேறு பெயர்கள் அல்லது அர்த்தங்களைக் கொண்டிருந்தாலும், அந்தந்த மக்கள் குழுமங்களிடையே ஒரு உயிர்ப்பை, ஈடுபாட்டைக் கொடுக்கும் சக்தியாக அமைகிறது.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளாக தமிழர் கொண்டாடும் விழாக்களில் தைப்பொங்கல் விழா சிறப்பானதாகும். இவ்விழா அனைத்துத் தமிழ் மக்களுக்கும் சொந்தமானது. இந்து சமயத்தவர் மட்டுமல்ல தமிழ் கிறிஸ்தவர்கள், முகமதியர்கள் உரிமையோடு கொண்டாடும் திருநாளிது. உழவர்கள் மட்டுமன்றி, அனைத்துத் (தொடர்ச்சி 10 ஆம் பக்கம்)

## "கடன் செய்து கொடுப்பதே"

கடன் கொடுப்பதும் வாங்குவதும் வாழ்வின் ஒரு தவிர்க்க முடியாத செயல். தனிமனிதன், நிறுவனங்கள், அரசுகள்... கடன்கொடுத்து வாங்குவதில் ஈடுபட்டு வருகிறன. கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன் என்பது நாம் கேட்டு, வாசித்தது. எனவே இராமாயன காலத்தில் இருந்தது வருகின்றது. பண்டைக்காலம் தொட்டு கடன்கொடுப்பவர்கள் பின்வரும் விடயங்களைக் கருத்தில் கொண்டே, கடன் வழங்கி வருகிறார்கள்.

- போதிய அளவு வருமானம் (Ability to Repay)
- கடன்பெறுபவரது நாணயம். (Credit History)
- கடனுக்கு ஈடாக இருக்கும் பொருளின் பெறுமதி (Equity of Collateral)
- கொடுக்கல் வாங்கலில் கிடைக்கும் இலாபம் (Interest)

இந்த அடிப்படை விடயங்கள் இன்று நவீன மயப்படுத்தப்பட்டு கடன் கொடுப்பவர்களைப் பாதுகாக்கும் சட்டதிட்டங்களுடன் செயற்பட்டு வருகின்றது. கனடாவில் வீடு வாங்க கடன்பெறும் (mortgage loan) நம்மவர்கள் இவ் விடயங்களை ஆராய்ந்து தகுந்த முன்னேற்பாட்டுடன் அணுகுவது வாழ்வை இலகுவாக்க வழிசெய்யும்.

**வீடு வாங்கும்பொழுது Mortgage தவிர Closing cost, moving cost போன்றவற்றையும் கவனத்தில் எடுத்தல் அவசியம்.**

கடன்கொடுப்பவர்களின் (Creditors or Lenders) நோக்கம் கொடுத்த கடனை வட்டியுடன் திரும்பப் பெறுவது ஆகும். கடன் தவணைப் பணம் தாமதமாவதையும் தடைப்படுவதையும் (default) தவிர்ப்பதற்காக

1. நிரந்தர வருமானம் (Permanent Income)
2. GDS (Gross Debt Service Ratio)
3. TDS (Total Debt Service Ratio) ஆகியவற்றை உபயோகித்து கடன்தொகை நிர்ணயிக்கப்படும்.

தொடர்ந்து இரண்டு வருடங்களாவது ஒரு வேலை அல்லது ஒரே துறையில் வேலை செய்தல் நிரந்தர தன்மையை அளிக்கிறது. சொந்தமாகத் தொழில் செய்பவர்கள் விடயத்தில் Financial Statements, Notice of Tax Assessment போன்ற (Tax) ஆவணங்களும். மற்றவர்கள் விடயத்தில் தொழில் புரிவதற்கான Employment Letters, Pay Stubs, T4 Slips போன்றவையும் நிரந்தர தன்மையை உறுதி செய்யும்.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்)


வசந்தா நகை மாளிகை
Since 1987
வசந்தன் பத்தர் - பத்மநாதன் பத்தர்
Tel: 905-848-5151
Fax: 905-848-8502
10:00AM-8:30PM
திங்கள் மூடப்படும்
3025 HURONTARIO ST.
UNIT 103A
MISSISSAUGA, ON
L5A 2H1 CANADA

Singapore Communication
• $30.00 / m
50 mins Free
Lunch Hr (12 - 1pm) Free
Evenings & Weekends Free
350 mins Free
Evenings & Weekends Free
* Offer Ends Without Notice*
• $40.00 / M
• u/L Incoming call 500 mins outgoing*
• Up to $150.00 Hardware rebate in store
Store: 416-740-5292
Buy One Accessories & Get One ½ Price
5010 Steeles Ave. W., Unit 17ABC - Kipling & Steeles

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா -கொழும்புச்
சுற்றுப் புறங்களுக்கும் -
சிங்கப்பூர் - சென்னை
ஆகிய இடங்களுக்கும்
கடுகதியில் பணம்
அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221





சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை, 7am - மாலை 9pm வரை திறந்திருக்கும். தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
திங்கள் - வியாழன்
காலை 7am - 2pm,
மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of Mcnicoll Ave.), Scarboro., ON.





Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)
• Auto
• Home
• R.R.S.P
• Life
• Disability
• Mutual Fund
• Group Insurance
• Child Education
• Travel & Business
London Life
Liberty Mutual
416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/Sheppard)

RE/MAX Above the Crowd!
வீடு விற்க, வாங்க...
Raja M. Mahendran, P. Eng.
(Sales Rep.)
Office: 416.491.4002
Pager: 416.589.4270
இன்றைய சேவையே நாளைய வெற்றி!

# அறிவும் ஆக்கமும் 118

விஜய குலத்துங்கம்



எங்கள் மூளை மிகவும் சக்தி வாய்ந்தது என்பது அனைவரும் அறிந்தது. எங்கள் பலருக்கும் கிடைத்திருக்கக் கூடிய அனுபவம் என்னவென்றால் ஒரு சினிமாப் பாடலையோ, வேறு பாடலையோ கேட்கும் போது முன்னர் நடந்த ஒரு சம்பவம் மீண்டும் ஞாபகத்திற்கு வருவது ஆகும். முன்னர் அந்த சம்பவம் நடந்த போது அந்தப் பாடல் ஒலித்திருக்கும். பின்னர் அதே பாடலைக் கேட்கும் போது அந்த சம்பவம் நினைவுக்கு வரும். இது பல வருடங்களுக்கு முன்னர் நடந்த சம்பவமாகக் கூட இருக்கலாம். சில வேளைகளில் நாம் சிறுவர்களாக இருந்த போது நடந்த சம்பவம் கூட, பெரியவராக வந்ததும் நினைவுக்கு வரலாம்.

இதுபோல 'மணம்' கூட சம்பவங்களை நினைவு கூரக் கூடியதாக உள்ளது. இது சாக்கடையின் துர்நாற்றமாகக் கூட இருக்கலாம், அல்லது நல்ல நறுமணம் கொண்ட 'சென்ற்' வாசனையாகக் கூட இருக்கலாம். சில வாசனைத் திரவியங்களின் மணம் அதை வழக்கமாக உபயோகிப்பவரை நினைவுக்கு கொண்டுவரலாம். சில வேளைகளில் ஊதுபத்தி வாசனை இறந்த வீடு ஒன்றையும், பன்னீரின் வாசனை திருமண வைபத்தையும் நினைவுபடுத்தலாம்.

தற்போது ஆராய்ச்சியாளர்கள் மூளையின் ஒரு குறிப்பிட்ட பகுதிதான் இதற்கு காரணமாக உள்ளது எனக் கூறுகின்றார்கள். இந்தப் பகுதிதான் பாடல், மணம் ஆகியவற்றோடு நடந்த சம்பவங்களை தொடர்புடுத்தி எங்களுக்கு நினைவூட்டுகின்றது எனக் கண்டுபிடித்துள்ளார்கள். அமெரிக்க மாநிலமான டெக்சாஸ் மாநிலத்திலுள்ள ஹீஸ்டன் என்ற நகரத்திலுள்ள Bayer College of Medicine என்ற சர்வகலாசாலையைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களின் பரிசோதனைகளில் இருந்து மூளையின் Hippocampus என்ற பகுதியிலுள்ள CA3 என்ற இடத்தில் தான் இந்த தொழிற்பாடு நடக்கின்றதெனக் கண்டுள்ளார்கள். எலிகளில் செய்த பரிசோதனைகளில் இருந்தே இந்த விடயம் அறியப்பட்டது. இந்த ஆராய்சிக்குக் குழுவின் தலைவரான Dan Johnson என்பவர் கருத்துத் தெரிவிக்கையில் மூளையின் Hippocampus பகுதியிலுள்ள CA3 என்னும் இடத்தில்தான் 'pattern completion' என்ற செயற்பாடு நடக்கின்றது எனக் கூறினார். அதாவது ஒரு பாடலைக் கேட்கும் போது, அரைகுறைய இருக்கும் மூளையின் பதிவுகளை ஒன்று சேர்த்து, பாடலையும் நடந்த சம்பவத்தையும் ஒன்று சேர்த்து எங்களுக்கு நினைவுபடுத்துக்கின்றது. இந்த ஆராய்ச்சியில் இவர்களுடன் ஜப்பானிலுள்ள sapporo என்னும் நகரத்திலுள்ள மருத்துவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களும், அமெரிக்காவின் Massachusete Institute of Technology நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களும் ஈடுபட்டிருந்தார்கள். இந்த ஆராய்ச்சி பற்றிய கட்டுரை Journal Science என்ற சஞ்சிகையில் வெளி வந்துள்ளது.

மூளையின் அபார சக்தியை வைத்து இன்னுமொரு தொழில்நுட்பத்தை விருத்தி செய்ய விஞ்ஞானிகள் முயன்று வருகின்றார்கள். தற்போது நாங்கள் மின்கணினியினுள் ஏதாவது தரவை உட்செலுத்த வேண்டுமென்றால் key-board எனப்படும் கருவியையோ, அல்லது mouse எனப்படும் கருவியையோ உபயோகிக்கின்றோம். ஆனால் எதிர்காலத்தில் எமது கண்ணை உபயோகித்து, எங்கள் பார்வையின் மூலம் மின்கணினியை கட்டுப் படுத்தலாம் என விஞ்ஞான ஆராய்ச்சியா ளர்கள் கருதுகின்றார்கள். இலண்டனிலுள்ள Imperial Collegeஐச் சேர்ந்த விஞ்ஞானிகள் இந்த முயற்சியில் தற்போது ஈடுபட்டு வருகின் றார்கள்.

ஒரு பொருளை நாம் பார்க்கும் போது முதலில் கண்கள் அவற்றைப் பார்க்கின்றன. ஆனால் எல்லா வேளைகளிலும் பார்க்கும் பொருட்களை ஆராய்வதில்லை. அதை அடையாளம் காண முற்படுவதும் இல்லை. உதாரணமாக ஒரு நிலத்துக்குக் கீழான இரயில் வண்டியில் செல்லும் போது பல மக்களை எங்கள் கண்கள் பார்க்கின்றன. ஆனால் சிலரை மாத்திரம் கண்கள் பார்த்து அந்தத் தகவலை மூளைக்கு அனுப்பும். மூளையும் அதற்கேற்ப கட்டளைகளை கண்களுக்கோ அல்லது மற்ற உறுப்புகளுக்கோ அனுப்பும். நாம் தெரிந்தவரைக் காணும் போது, கண்கள் அந்தத் தகவலை மூளைக்கு அனுப்ப, மூளை கண்களை மீண்டும் பார்த்து உறுதி செய்யச் சொல்லி, உறுதி செய்த பின்பு அவரை நோக்கி எங்கள் உடலை அசையச் செய்யும். இப்படியாக கண்கள் பார்க்கும் போது என்னவிதமான உயிரியல் அடிப்படையான பார்க்கும் உடற்றொழிலியல் இயங்குகின்றது என்பதை கண்டறிந்து, அதை எப்படி ஒரு மின்கணினியின் பார்வைக்குரிய செயற்பாடாக மாற்றுவது என்பதை விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றார்கள்.

தலையில் அணியக் கூடிய infrared கதிர்கள் மூலம் கண்ணசைவை கண்டு கொள்ளக் கூடிய கருவி ஒன்றின் மூலம் ஒரு குறிப்பிட்ட செயற்பாட்டின் போது கண்கள் எப்படி அசைகின்றன என்பதை விஞ்ஞானிகள் கண்டறிய முயற்சி செய்கின்றார்கள். இந்த முயற்சி வெற்றியடையும் பட்சத்தில் mouse அசைத்து மின்கணினியில் உள்ள cursor அசைப்பதற்குப் பதிலாக கண் மூலம் அசைத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

எங்கள் எல்லோரும் நல்ல மூளை உள்ளது. ஆனால் சிலர் அதை திறமையாக உபயோகிக்கின்றார்கள். சிலர் உபயோகிப்பது இல்லை. அதுதான் வித்தியாசம். மேற்கு நாடுகளில் உள்ளவர்கள் மூளையை திறமையாக உபயோகித்து எதிர்காலத்தை கருத்தில் கொண்டு ஆராய்ச்சிகளையும், புதிய கண்டுபிடிப்புகளையும் மேற்கொள்கின்றார்கள் .ஆனால் மூன்றாம் உலக வளர்ந்து வரும் நாடுகள் மேற்கு நாட்டவர்களின் கண்டு பிடிப்புகளை அனுபவித்துக் கொண்டு, தமது மூளையை சரியான வழியில் உபயோகிப்ப தில்லை. முக்கியமாக நம்மவர் இன்னும் பழைய புராணங்களை ஆராய்ந்து கொண்டும் நமது முன்னோர்களின் புகழ்பாடியும் வருகின்றார்கள். அந்தக் காலத்தில் நமது முன்னோர்கள் என்னென்னவோ எல்லாம் செய்தார்கள் என்று பெருமை பேசிக் கொள்கின்றார்களே தவிர நாம் என்ன செய்தோம், செய்கின்றோம், செய்யப் போகின்றோம் என்பது பற்றி சிந்திப்பதே இல்லை. எங்கள் எதிர்கால சந்ததியினர் எம்மைப் பற்றி பெருமை பேச வேண்டுமானால் நாம் அதற்கேற்ப நமது மூளையை ஆக்க பூர்வமான வழிகளில் சிந்தித்து செயல்பட வேண்டும்.

விஜே குலத்துங்கத்தின் தயாரிப்பில் நடக்கும் விஞ்ஞான நிகழ்ச்சியான, "விஞ்ஞானமும் நாமும்" என்ற நிகழ்ச்சியை இரண்டு கிழமைகளுக்கு ஒரு முறை TVI தொலைக்காட்சியில் திங்கள் இரவு 9:30 இற்கு பார்க்கலாம்.

* * * * *

"அறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களையும் நீங்கள் எவ்வகையான விடயங்களைக் இக் கட்டுரையில் எதிர் பார்க்கிறீர்கள் என்பதையும் விஜே குலத்துங்கம், 361 Highglen Ave., Markham, Ont., L3S 3M2 என்ற முகவரிக்கு அல்லது wijeyalku@hotmail.com என்ற முகவரிக்கு அனுப்பவும்.


நூற்றுக்கணக்கான டொலர்கள் பெறுமதியான செயற்கை மருந்துகளுக்கு இலக்காகி மேலும் உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?

கவலையை விடுங்கள்

கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்று இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பெற்ற



**Vitaplex**

சம்போ அன்ட் கன்டிஷனர்

உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.



Vitaplex Shampoo $9.99
Vitaplex Conditioner $9.99
Vitaplex Shampoo Plus Conditioner $18.99
Applicable taxes extra

கிடைக்கும் இடங்கள்

ரொரன்ரோ, ஸ்காபரோ, மிஸ்ஸிஸாகா எதோபிக்கோ மற்றும் மொன்றியாலில் அநேக தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.

**வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?**



வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள்.

முற்றாக ஒழிக்க அழையுங்கள்.



- No Spraying
- No Smelling
- No Moving




Call: Kanthan Tel: 416-283-9538

கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்

விருது பெற்ற

**VIVEKA PRINTER**



உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும் முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்

80 BARBADOS BLVD., UNIT #4 SCAR., ON

416-410-6401

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

* Detailing
* Motor Shampoo
* Interior Shampoo
* Exterior Wash
* Waxing
* Repairs
* Safety Certification
* Overall Maintenance
* Under Coating
* Rust Proofing

**416-285-4998**
435 Midwest Road. Unit B5,
Scarborough, ON. M1P 3A6

SPECIAL


## இலங்கை தமிழ் எழுத்தாளருக்கு கனடாவின் இலக்கிய விருது

மணிக்கொடி பரம்பரை எழுத்தாளர் ஒருவர் இலங்கையில் இருக்கிறார். அவர் வேறு யாருமில்லை. மூத்த இலக்கியவாதி திரு. கே. கணேஷ் அவர்கள்தான். புதுமைப் பித்தன், கு.ப.ரா, பிச்சமூர்த்தி, மௌனி போன்றவர்கள் வரிசையில் அன்றே இலக்கியம் படைத்து பெருமை சேர்த்த மலையக எழுத்தாளர் இவர். கனடிய தமிழ் இலக்கியத் தோட்டம் இந்த வருடம் இவருக்கு இயல் விருது அளித்துக் கௌரவிக்கிறது. இது ஒருவர் தன் வாழ்நாளில் ஆற்றிய இலக்கிய சேவைக்காக வருடா வருடம் அளிக்கப்படுவது. இம்முறை திரு. கே. கணேஷ் அவர்களுக்கு இயல் விருதும், பணமுடிப்பு C$1500ம் வழங்கப்பட்டது.



இடதுசாரிக் கொள்கையுடையவரான திரு. கே. கணேஷ் ஒரு கவிஞராகவே எழுத்துலகில் பிரவேசித்தார். பன்னிரண்டு வயதிலே சென்னையில் வெளியான லோகசக்தி இதழில் இவருடைய முதல் கவிதை பிரசுரமானது. தமிழ்நாட்டில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஆரம்பிப்பதில் உறுதுணையாக இருந்த இவர் ஜப்பான் சக்கரவர்த்தியின் பிறந்த நாள் விழாவுக்காக நடந்த அகில உலக கவிதைப் போட்டியில் பரிசு பெற்று ஜப்பான் நாட்டுக்கு அழைப்பு பெற்றுக் கௌரவிக்கப்பட்டார். இலங்கையிலும் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தொடங்கி அதன் முதல் இணை செயலாளராக பணி புரிந்தவர், "பாரதி" என்ற சஞ்சிகையையும் வெளியிட்டார். நவசக்தி, தேசாபிமானி, வீரகேசரி போன்ற பத்திரிகைகளில் இவர் படைப்புகள் தொடர்ந்து வெளிவந்தன.

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும், கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்" என்ற பாரதியின் கூற்றுக்கு இணங்க உலகமொழிகளின் பல அருமையான படைப்புக்களை தமிழிலே தந்தார். இவர் முயற்சியில் வெளிவந்த இருபதுக்கும் மேலான மொழி பெயர்ப்புக்களில் முக்கியமானவை முல்க்ராஜ் ஆனந்தின் தீண்டத்தாகாதவனும் (Untouchable) சீனாவின் சிறுகதைச் சிற்பி லூசினின் சிறுகதை தொகுதிகளும் என்று சொல்லலாம். இவை தவிர வியத்நாம், பல்கேரியா, ஹங்கேரி, உக்கிரேய்ன், சோவியத் நாட்டுப் படைப்புகளும் இவர் மொழிபெயர்ப்பில் அடங்கும். இவருடைய வியத்நாமிய சிறுகதை நூலுக்கும், உக்கிரேனிய கவிதை மொழிபெயர்ப்புக்கும் விருதுகள் கிடைத்தன. இலக்கியச் செம்மல் (1991), கலாபூஷணம் (1995) ஆகிய அரசு இலக்கிய விருதுகளும் இவருக்கு வழங்கப்பட்டன.

இலக்கிய எழுத்து, எழுத்தாளர்கள், எழுத்தாளர் அமைப்புகள், சஞ்சிகைகள், மொழிபெயர்ப்பு என்று சகல துறைகளிலும் இலக்கியத்துடன் தன்னை அர்பணித்து இறுக்கமாகப் பிணைத்துக்கொண்ட இவருக்கு இப்பொழுது எண்பதாவது பிராயம் நிறைந்திருக்கிறது. இவர் அறுபது வருடங்களுக்கு மேலாக தமிழ்தொண்டு செய்து வருகிறார். இன்றைய தருணத்தில் இந்த விருது கிடைப்பது மிகவும் பொருத்தமானது. இது இவருக்கு மட்டுமல்ல தமிழ் கூறும் நல்லுகத்தை சார்ந்த ஒவ்வொரு தமிழருக்கும் கிடைக்கும் மரியாதை ஆகும்.

பரிசளிப்பு விழா ஜனவரி இரண்டாம் தேதி வெள்ளவத்தை ராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் நடைபெற்றது. பேராசிரியர் சந்திரசேகரம் தலைமையில் கூடிய இந்த நிகழ்ச்சியில் பேராசிரியர் கா. சிவத்தம்பி சிறப்புரை ஆற்றி கௌரவித்தார். ரொறன்ரோ பல்கலைக்கழக பேராசிரியர் செல்வா கனகநாயகம் தமிழ் இலக்கியத் தோட்டம் சார்பாக இயல் விருதும், பணமுடிப்பும் வழங்கினார்.



எமது பத்திரிகை எழுத்தாளரும் ஓய்வு பெற்ற பாடசாலை அதிபருமான நயினையம்பதி நா.க. சிவராமலிங்கம் அவர்கள் எலிசபெத் மகராணியார் முடிசூடிய ஐம்பது ஆண்டு நிறைவையொட்டி கனடிய அரசால் தங்கப் பதக்கமும் பாராட்டுப் பத்திரமும் ரோஸ்டேல் மத்திய பாராளுமன்ற உறுப்பினர் ஜோர்ச் சிமித்மன் அவர்களால் ஒன்ராரியோ பாராளுமன்றில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். ரொறன்ரோ தமிழ் முதியோர் மன்றத்தின் தலைவராக இருந்து ஆற்றிய அளப்பரிய சேவைகளுக்காக இக் கௌரவம் அன்னாருக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. அன்னார் சுகநலத்துடன் நீண்ட நாட்கள் வாழ்ந்து தொடர்ந்தும் சமய, சமூக சேவைகள் ஆற்றுவதற்கு மனநிறைவுடன்/நாமும் வாழ்த்துகின்றோம்.


**வெளிவந்துவிட்டது**

இளங்கதிர் 4

இசை - பாடல் - கதை - கவிக்குயில் - நடனம் -
நாடகம் - மழலை நேரம் - அறிவிற்கு விருந்து

இசை, இணைத்தயாரிப்பு - **பவதாரணி மதிவாசன்**
தயாரிப்பு, இயக்கம் - **எஸ். மதிவாசன்**

தொடர்புகளுக்கு - 905-785-7215, 416- 457-8424, 416-490-9199



# ACTION HONDA

"WHERE CAR OWNERSHIP IS MADE EASY"

புதிய பழைய
HONDA வாகனங்களை
ஈழத்தமிழ் மகன் சோதீஸ்
இடம் பெறும் போது

* சிறந்த சேவை
* Life time Oil change
* மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.

இம்மாத ஸ்பெஷல்
FINANCE
5.8% மட்டும்


**416-704-1179**

அலுவலக நேரம்
Mon, Fri, Sat: 9 am - 6 pm
Tues, Wed: 12 noon - 9 pm

4334 Kingston Rd, Scarborough

Finch Ave
HWY 401
Lawrence Ave
Eglinton Ave
Kingston Rd
Kennedy Rd
Markham Rd
Morningside Av

# தூறல்



### வாய்ச் சொல்லில்.... (வீரரடி)

வழமை போல் இவ் வருடமும் யேசு கிறிஸ்துவின் பிறந்த நாளையொட்டிய விடுமுறைத் தொடரை யொட்டிய ஒரு விருந்துக்குச் சென்றிருந்தேன். நண்பர்கள் மத்தியில் இரு நண்பர்கள் இவ் விடயத்தை கூறினார்கள். கிறிஸ்மஸ் நாளன்று (25ஆம் திகதி) மாலை சுமார் ஐந்து மணிக்கு நண்பர்கள் கூடிய அறையை (அப்படித்தான் கூறவேண்டும் அமைதியான ஒரு நிலக்கீழ் அறை) அடைந்து கதவைத் தட்டினேன். ஆச்சரியம் சுமார் 25 வயது மதிக்கத் தக்க ஓர் இளைஞன். உள்ளே சென்றோம். ஒரு சில நிமிடங்கள் பேசிய பின்னர் விடயத்திற்கு வந்தார். சுமார் 10 நிமிடங்கள் அதன் பின்னர் ஒரு ஐந்து நிமிடம்...அதன் பின்னர் என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. அப்படி ஓர் அதிர்ச்சி, அதனையும் மீறி ஓர் ஆனந்தம். செழியனின் கவிதை வரிகளே நினைவுக்கு வந்தது.



"கரித்துண்டாயினும், எழுதியே முடிப்போம்." இந்த இளைஞர் செயலில் காட்டிவிட்டார். முதலில் அவருக்கு வாழ்த்துக்கள்.

அப்படி என்ன அவர் செய்து விட்டார் என நீங்கள் நினைக்கலாம். சுமார் 10 நிமிடங்கள் ஓடக்கூடிய ஒரு குறும்படம் ஒன்றை அவர் எழுதி, இயக்கியிருந்தார். 1896இல் தான் சினிமா என்கிற சாதனம் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. அது பேசத் தொடங்க முன்னரே சார்லி சப்ளின் தனது படங்கள் மூலம் புரட்சி செய்தார். சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த 'பைசிக்கிள் தீவ்ஸ்' என்ற திரைப்படம் எத்தனை புதிய படைப்புக்கள் உருவாகக் காரணமாக இருந்தது. இந்தியாவின் சத்யஜித்ரே, மிருநால் சென், ரித்விக் கட்டக் எனப் பட்டியலே போடலாம். இன்றுகூட கனடிய மற்றும் உலக திரைப்பட விழாக்களில் இப் படம் தொடர்ச்சியாகக் காட்டப்படுகிறது.

## வானரன்

இந் நிலையில் தமிழ்த் திரைப் படங்களின் நிலை மிகவும் மோசமாகவே வளர்ந்து வந்தது. அதுவும் இலங்கைத் தமிழ்த் திரைப்படங்களின் நிலை அதை விட மோசமாக இருந்தது. காரணம் தென்னிந்திய திரைப்படங்களின் தாக்கம்.

கடந்த பத்தாண்டுகளில் இலங்கையிலும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலும் புதிய மாற்றங்களை காணக் கூடியதாக இருந்தது.

1. பொருளாதார ரீதியாக தாக்குப் பிடிப்பது கடினமாக இருந்தாலும், புதிய தொழில்நுட்ப வசதிகள் மூலம் முயற்சிகளை செய்து பார்த்தல்.
2. புதிய திரை வடிவங்கள் பற்றிய அறிவை பெற்றுக்கொள்ளல்.
3. இலங்கை தமிழிலக்கியமும், புலம்பெயர் இலக்கியமும் புதிய சீரிய வடிவை நோக்கி நகர்ந்து செல்லல். இதற்கு போர் புதிய சூழலின் உக்கிரம். புதிய சிந்தனைகளின் உள் வாங்கல்கள் எனப் பலவற்றைக் கூறலாம்.

இந்த வகையில் ஜேர்மன், பிரான்ஸ், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் பல குறும்படங்கள் தயாரிக்கப்பட்டன. பிரான்ஸில் இரு தடவைகளுக்கு மேல் இதற்கான குறும்பட விழாவும் நடாத்தப்பட்டன. இந்தியாவில் "சிலம்பம் 2002" என்ற பெயரில் "பைசிக்கிள் தீவ்ஸ்" என்ற திரைப்படத்தை இயக்கிய விக்ரோறியா டியோடி சிகாவின் நூற்றாண்டு விழாவையொட்டி குறுந்திரைபட விழா ஒன்றை நடாத்தினார்கள்.

கனடாவில் கடந்த வருடம் சில அறிவிப்புக்கள் வெளிவந்தமை ஒரு நல்ல ஆரம்பத்தின் அறிகுறியே. இதனை எழுதிக் கொண்டிருக்கும் பொழுது மூன்று அமைப்புக்கள் வருட முற்பகுதியில் மூன்று தனித்தனி குறும்பட விழாக்களை நடத்த விருப்பதாக அறிகிறேன். இவ்வகையில் 2003 ஒரு சிறப்பான ஆண்டாக அமையும் என நினைக்கின்றேன். ஆனால் இவற்றில் எத்தனை படங்கள் கனடா வாழ் மக்களால் தயாரிக்கப்பட்டவை என்பதே கவலைக்குரிய ஒரு கேள்வி.

அவ் வகையில் இந்த இளைஞனின் முயற்சி மிகவும் முக்கியானது. இதற்கு முன்பு பொன் சுதா - Insights என்ற குறுந்திரைப்படமும், வேறு சில குறுந்திரைப்படங்களும் வெளிவந்துள்ளன.

முல்லையூர் K. பாஸ்கர் தனது சொந்தச் செலவில் தயாரித்து இயக்கியுள்ள குறுந்திரைப் படமே "வாய்ச் சொல்லில்" கவலையீனமாக கார் ஓட்டுதலின் பாதிப்பை இந்த 10 நிமிடங்களில் காட்டியுள்ளார். ஆனால் இக் கவலையீனத்தின் பின்னணி விரிந்து செல்கிறது. காதலர்களுக்கிடையில் ஏற்படும் சந்தேகம், சந்தேகத்திற்குரிய எல்லைகள். பொதுவாக எந்தக் கலைப் படைப்பும் அதனை உள்வாங்கிய பின் சில மணி நேரங்களில் அது மனதிற்குள் புதைந்து விடும். மாறாக சில பல வருடங்களுக்கும் சிந்தனைகளை தூண்டும். இன்றைய வேக ஓட்டத்தில் பல மைல்களை சில நிமிடங்களில் கடக்க முய்றசிக்கும் வேலைப் பழுக்கள், பிரச்சினைகள் மத்தியில் சீரிய படைப்புக்களின் தேவை இதுவாகவே இருக்க வேண்டும். அவ் வகையிலேயே இவரது இந்த "வாய்ச் சொல்லில்" அமைந்துள்ளது. மீண்டும், மீண்டும் சிந்தனைகளைத் தூண்டுகிறது. அத்துடன் கார் ஓட்டுபவர்கள் ஓட்டும் பாணி அனைத்து இளைஞர்களும் ஏன் வயது வந்தவர்களும் கூட கவனிக்க வேண்டிய விடயம்.

தொழில்நுட்ப ரீதியாகக் கூட இப்படம் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று ரொறன்ரோ மாநகர வீதியொன்றில் இயல்பாக படமாக்கப்பட்டுள்ளது. காமெரா வைக்கப்பட்டுள்ள இடங்களை காட்சிகளை வைத்து மிகவும் நுணுக்கமாகப் பார்த்தால் உணரக்கூடியாதாக உள்ளது. காரின் முன்சீட்டில் மாறி மாறி கமரா (ஓட்டுநர் பக்கத்திலிருப்பவர்) வைக்கப்பட்டுள்ளது.

இதில் இயல்பாகவே நடித்துள்ளவர்கள். சுதன்சான், மயூரி பாலன், ஜனனி யோகதாசன்.

(தொடரும்)


வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?

UNITED
PERSONAL INJURY ASSOCIATES

அனுபவசாலியின் ஆலோசனை
பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்

*The Car Accident People*
ஒன்ராறியோவின் மிகப்பெரிய ஸ்தாபனம்

**கனடாவில் 30 வருடத்திற்கும் மேலான அனுபவம்**

**உங்களுக்குத் தெரியுமா?**
நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் **$172,000.00** வரை இழப்பீடாகப் பெறமுடியும். அத்துடன் இதனால் ஏற்படும் வலி, வருத்தம், வேலை இழப்புப் பணம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி மற்றும் பல்வகையான இழப்புக்களுக்கு நஷ்டஈடாகப் பல்லாயிரம் டொலர்கள் வரையில் பெறமுடியும்.

**விபத்து உங்கள் தவறானாலும் கூட**
உங்களால் **$ 172,000.00** டொலர் வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400.00** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

உடல்ரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ பாதிக்கப்பட்டிருப்பின் இன்றே அழையுங்கள்
**யுனைட்டெட்**

*பண இழப்பீட்டுத் தீர்வு மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தொடர்வதில் உங்களுக்குள்ள உரிமைகளை அறிய உடன் தொடர்பு கொள்ளவும்*

வீட்டுப்பெண்ணா அல்லது குழந்தை பராமரிப்பவரா? வேலை செய்கிறீர்களா அல்லது வேலையில்லையா? பள்ளி மாணவரா? எவராயிருப்பினும் உங்களால் நஷ்டஈடு பெறமுடியும். நீங்கள் சாரதியாக இருந்தாலும் பாதசாரியாக இருந்தாலும் பேரூந்தில் பயணிப்பவரானாலும் சைக்கிளில் செல்பவரானாலும் இன்னும் தவறு உங்களுடையதாக இருப்பினும் கூட உங்களால் நஷ்டஈடு பெறமுடியும்.

**உங்கள் அறியாமையால் வாரத்திற்கு**
**$1000.00**
**வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்**

**பிழையான அனுபவமில்லாத ஆலோசனைகளுக்குள் விழுந்து விடாதீர்கள்**

தமிழ் உட்பட 25ற்கும் அதிகமான மொழிகளில் சேவை வழங்கப்படுகிறது

*இலவச ஆலோசனைகளுக்கும் தமிழில் தொடர்புகளுக்கும் இன்றே அழையுங்கள்*

**தீபன் - (416) 505-9804**

- 5255 Yonge Street, Suite 200, North York
- 257 Dundas Street E., Unit 1, Mississauga
- 29 King Street E., Unit 7, Kitchener
- 507-251 Bank Street, Ottawa
- 195 Main Street E., 1st Floor, Hamilton
- 75 Collier St., Unit A, Barrie




# விண்வெளி

117

கனி



## நட்சத்திரங்கள்

மீண்டும் நட்சத்திரங்கள் பற்றிப் பார்ப்போம். நட்சத்திரங்களை வகைப்படுத்திப் பார்க்கும் எமது இப் பகுதியில் இன்று இன்னொரு வகையினைப் பார்ப்போம். பொதுவாக நட்சத்திரங்கள்; வெண்குள்ளர்கள்; சாதாரண சூரியன் ஒத்த உயிர்ப்புள்ள நட்சத்திரங்கள்; சிகப்பு இராட்சதர்கள்; அதி இராட்சதர்கள் எனப் பருமன்களின் அடிப்படையில் பிரித்துள்ளார்கள். இவற்றின் பருமன்களை ஒப்பீட்டு அடிப்படையில் பார்ப்போம்.

நியூத்திரன் நட்சத்திரங்களே பருமனில் மிகச் சிறியன. நமது பூமியைவிடவும் பருமனில் சிறிய நட்சத்திரங்களே இந்த நியூத்திரன் நட்சத்திரங்கள் ஆகும். நியூத்திரன் நட்சத்திரங்களைவிட பருமனில் பெரியனவான அடுத்த வகை நட்சத்திரங்கள் White Dwarfs எனும் "வெண்குள்ளர்"கள். நியூத்திரன் நட்சத்திரங்களை விட சுமாராக 500 மடங்கு அளவில் பெரியன நமது சூரியனை ஒத்த நட்சத்திரங்கள். இவை சுமாராக பெரிய சிகப்பு இராட்சதர்கள் எனும் Red Giants சூரியனைப் போல் 30, 40 மடங்கு பெரியன. இந்த சிகப்பு இராட்சதர்களை விட 10, 15 மடங்கு பருமனில் பெரிய நட்சத்திரங்கள், அதாவது சுமாராக எமது சூரியனை விட 300 மடங்கு பெரியனவாக உள்ள நட்சத்திரங்கள் அதிஇராட்ச நட்சத்திரங்கள் (super gian stars) எனப்படுகின்றன.

பிரபஞ்சத்தில் காணப்படும் நட்சத்திரங்களில் 90%மான நட்சத்திரங்கள் சூரியனை ஒத்த நட்சத்திரங்கள் ஆகும். உயிர்ப்புள்ள நட்சத்திரங்கள் எனப்படும் இவை எல்லாம் விளைவாக சக்தியை வெளிவிட்டு ஒளிர்ந்து கொண்டு உள்ளன. நட்சத்திரம் ஒன்றின் பிரதான இயல்பு இது என்பதனாலேயே இவற்றை உயிர்ப்புள்ள நட்சத்திரங்கள் என்கின்றோம். வெண்குள்ளார்கள், சிகப்பு இராட்சதர்கள், அதி இராட்சதர்கள், நியூத்திரன் நட்சத்திரங்கள் என்பன வெல்லாம் கூட இப்பிரதான தொடர் நட்சத்திரங்களின் வரிசையில் இருந்தே வந்தவை. இவை பற்றி பின்னர் விளக்கமாகப் பார்ப்போம்.

நட்சத்திரங்கள் எனும் இப் பகுதியினுள் இடைச் செருகலாக சில விடயங்கள். Clone Baby Girl. குளோனிங் முறையில் பிறந்த முதல் பெண்குழந்தை. டிசம்பர் 26ஆம் திகதி 2002ஆம் ஆண்டு உலகின் முதற் குளோனிங் பெண் குழந்தை. Boxing day பரிசாக வடஅமெரிக்காவில் சுகப்பிரசவமாகப் பிறந்தது. குழந்தை 7 இறாத்தல் நிறை கொண்டது. இது போன்ற பல விடயங்கள் Boxing week செய்திகளாக எல்லா ஊடகங்களிலும் வெளிவந்தன. சகலதுறை மக்களையும் பரபரப்புக்குள்ளாகிய செய்திகளைப் பற்றி நீங்களும் நன்றாகவே அறிந்திருப்பீர்கள். அதனைப்பற்றி விலாவாரியாக மீண்டும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஆனால் இதன் பின்னணியில் ஏலியன் பகுதியில் வந்த சில விடயங்களை மீண்டும் பார்க்கக் கூடியதாகவுள்ளது.

அத்துடன் பூமியிற்கு மனிதர்கள் எவ்விதம் வந்தார்கள் அல்லது பூமியில் மனிதர்கள் எவ்விதம் தோன்றினார்கள் என்பது பற்றி அந்நியர்கள் எனும் பகுதியில் எனது ஊகங்களை எழுதியிருந்தேன். ஏலியன்களின் செல்வாக்கு எவ்வளவு தூரம் மனிதர்களை பாதித்துள்ளது என்பதும் இப் பகுதியில் கூறியிருந்தேன். அதில் ஒரு பகுதிதான் "ஏலியன்களின் சமயம்". அவர்களின் கூற்றுப்படி மனிதஇனம் பூமியில் தோன்றியது ஏலியன்களின் பரிசோதனை ஒன்றின் விளைவாகவே என்பதாகும். அது ஒருவேளை குளோனிங் முறையாகக் கூட இருக்கலாம்.

குளோனிங் முறையில் ஏவாள் (Eve) எனும் பெண்குழந்தை பிறந்தது எனும் செய்தி பெரும் புரட்டுச் செய்தி என சில விஞ்ஞானிகள் கூறிய போதும் Real எனும் ஏலியன்கள் சார்பான இயக்கத்தை (இதை ஒரு மதம் என்று கூடச் சொல்கின்றனர் சிலர்) சேர்ந்தவர்கள் தமக்கு சாதகமாகக் கூறுகின்றனர். இவர்களின் கருத்துப்படி பூமியில் மனித குலத்தை பரிசோதனை வாயிலாக ஏற்படுத்திய வெளியுலக வாசிகள் மீண்டும் பூமிக்கு வருவார்கள். அதற்காக இவர்கள் காத்திருக்கின்றார்கள்.

மறுமுறை மீண்டும் நட்சத்திரங்கள் பற்றிப் பார்ப்போம்.


YARLCAN
STEAM CLEANING



உங்கள்
சகலவிதமான
Cleaning
தேவைகளுக்கும்
அழையுங்கள்-

* DUCT CLEANING
* CARPET CLEANING

மோகன்: (905) 887-7436 Cell: (416) 721-9709



Niru நிரு Niru நிரு Niru நிரு Niru நிரு Niru நிரு Niru நிரு

Niru BRAND®

"நிரு" வின்
விசேட பொங்கல் பொதிகள்

சலுகை விலையில் இலவச இணைப்புடன்

பொதி 1

இவை ஓர் அழகிய
பிளாஸ்ரிக் டப்பாவில்




தீட்டிய சிவப்புப் பச்சையரிசி
2 x 1 kg பைக்கற்
சர்க்கரை 400 g



பொதி 2

இவை அனைத்தும்
ஓர் அழகிய
எவர்சில்வர் தட்டுடன்

தீட்டிய சிவப்புப் பச்சை அரிசி 1 kg
சிவப்பு அவல் 200g
சர்க்கரை 400g
வறுத்த பயறு 200g
முந்திரிகை வற்றல் 100g
கற்கண்டு 100g
ஏலக்காய் 10g
கஜு 100g



முந்துங்கள்
மிகக்குறைவான எண்ணிக்கையிலேயே
இவை விற்பனைக்குள்ளமையால்
உங்கள் வர்த்தகர்களிடம்
இன்றே கேட்டு வாங்குங்கள்

Manufacturers & Distributors of
Niru Brand® Products
NIRU ENTERPRISES INC.
76 Howden Road, Scarborough, Ont. M1R 3E4 Canada
Tel: 416-750-1976 Fax: 416-750-8779
E-mail: niru@total.net Web: www.niru.com

Distributors in Europe
Niru (Europe) Ltd.,
16 College Fields Business Centre
Prince George's Road, London SW19 2PT U.K.
Tel:208-640-8228 Fax: 208-640-8423
E-mail: niru@supanet.com

Niru நிரு Niru நிரு Niru நிரு Niru நிரு Niru நிரு Niru நிரு

# கல்வி - அது வாழ்க்கைக் கண்

கடந்த இதழ் தொடர்ச்சி...

கல்வி கற்பதற்கு ஏற்ற பருவம் இளமைப் பருவமாகும். தாய் தந்தையின் அரவணைப்பில் உலகத் துன்பங்கள் அண்டாத இளமைப் பருவமே கல்வி கற்கச் சிறந்த பருவமாகும். மேலும் மனித மூளையின் அமைப்பும் கல்வி பயில அப்பருவத்தில் பெருந்துணை புரிகின்றது. இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பதும் ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா என்பதும் இளமையில் கற்க வேண்டியதன் அருமையை உணர்த்தி நிற்கின்றன. இதனை பின்வருமாறு பழமொழி நானூறு தெளிவாகாக் கூறுகின்றது.

சுங்கத் தீர்வை வசூலிக்கின்றவர் சாவடியைக் கடப்பதற்கு முன்னரே அதனை வசூலித்தல் வேண்டும். அங்ஙனமே தோணி ஓட்டுபவர் பயணிகளை அக்கரையில் சேர்ப்பதற்கு முன்னரே தமக்குரிய கூலியைப் பெற வேண்டும். சுங்கச் சாவடியைக் கடந்த பின்பு தீர்வைப் பெறுவது இயலாதது. அதே போன்று கற்பதற்கு ஏற்ற இளமைப் பருவத்தை வீணே கழித்து விட்டுப் பின்னால் கற்க இயலாது. உலகில் உள்ள குற்றங்களில் இளமையில் கல்லாதிருப்பதும் ஒன்று. இதனை

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம் - என்று நான் மணிக்கடிகை உணர்த்தி நிற்கின்றது. இளமையில் பல நூல்களை நாடிகற்காத மூத்த மகன் அவனது தந்தையை அட்டமத்து சனியாகத் துன்பப்படுத்துவான்



என்கின்றார் ஒளவையார்.

பிச்சை எடுத்தும் கற்றல் நன்று என்று இனியவை நாற்பது கூறுகின்றது. அதிவீரராம பாண்டியரும் இக் கருத்தை வலியுறுத்தும் வகையில் பின்வருமாறு கூறியுள்ளார்.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே

இரத்தலை புலவர் உலகம் கடிந்துள்ள போதிலும் கல்விக்காக இரத்தல் பழியன்று. பிச்சை எடுத்தாயினும் கல்வி பயிலுக என்றே வலியுறுத்தியுள்ளனர்.

இன்று கல்வியில் பல பிரிவுகள் உள்ளன. இத்தகைய அனைத்துப் பிரிவுகளும் அன்றைய கல்வி முறையில் இருக்கவில்லை. ஆனால் பழந்தமிழகத்தில் எண், எழுத்து என்பவற்றை அறிதலே கல்வியாகக் கருதப்பட்டது.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு - என்பது குறட்பா.

இதனை - கண்ணுங்காற் கண்ணும் கணிதம் எழுத்து என்று சிறுபஞ்ச மூலம் கூறுகின்றது. எண்ணெடு - எழுத்தின் வனப்பே வனப்பு என்று ஏலாதி கூறுகின்றது. இதனை எண்ணும் எழுத்தும் குறியும் அறிபவர் என அப்பரடிகள் அறிவுறுத்தியுள்ளார்.

## நா. க. சிவராமலிங்கம்

"அண்ணலும் நூலும் பொருளும், நிகழ்வும் இவை எனலும்
எண்ணினும் ஏனை எழுத்தினும் மிக்காய் இருந்தவர்"
என்ற நீலகேசி அடியையும்

எண்ணெழுத்திகழேல் என்ற ஆத்தி சூடி வரியையும் ஒப்பு நோக்கலாம்.

திருக்குறள், நாலடியார், திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, பழமொழிநானூறு, நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது போன்ற அறநூல்களும், நன்னெறி, நல்வழி அறநெறிச்சாரம், நீதி நெறிவிளக்கம், ஆத்திசூடி முதலான ஒளவையாரது நூல்களும் கல்வியின் சிறப்பை பெருமையை வலியுறுத்துவனவாக இருந்த போதிலும் கல்லாத பேர்கள் கணக்கற்றோர் காசினியில் காணப்படுகின்றனர். எனவே கல்லாத பேர்களே நல்லவர்கள் என்பது காதில் ஒலிக்கவே செய்கின்றது. கேள்வி ஞானத்தினாலும் அனுபத்தினாலும் ஏற்பட்ட அறிவும் கல்லாதவரிடம் காணப்படுவதினால் இக்கூற்று ஏற்பட்டிருக்கலாம்.


**EDUCATION FUND SERICES Inc.**

*The Children's Education Trust of Canada*

குழந்தைகளின் கல்விக்கான நம்பிக்கை நிதியம்

உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் கல்வியை ஊக்குவிக்கும் கனடா அரசாங்கத்தின் நன்கொடையை(20% Grant) பெற இன்றே நாடுங்கள்.

* டொலர் 10இல் இருந்து இத்திட்டத்தில் சேரலாம்!
* உங்கள் சேமிப்புக்கு உத்தரவாதம்!
* கல்வியை ஒருவராலும் களவாட முடியாது!



Siva Kanapathypillai
(Divisional Director)

சிறந்த சேவையையும், இலவச ஆலோசனைகளையும் பெறத் தொடர்பு கொள்ளுங்கள்:

416-438-0660 / 416-438-3578 Cell: 416-899-6044
Fax: 416-438-8532 Res: 905-472-1139
1200 Markham /Rd., Suite #301, Scarb., Ont.

முழுநேர, பகுதிநேர வேலை வாய்ப்புக்கள் உண்டு.



**RASANAYAGAM ANTONYPILLAI, B.Sc. Agr.**

RE/MAX Golden Way Realty Inc.



வீடு விற்க, வாங்க, வாடகைக்கு பெற, பெற்றுக் கொடுக்க அழையுங்கள் - ராஜன் அன்ரனி

Office: 416-299-8199
Home: 416-516-9897
Pager: 416-510-7755

3390 MIDLAND AVE.
UNIT 8, TORONTO, ON.
M1V 5K3



**J.A.B. TRAVELS & TOURS**

*Top Sales Award for Cathy pacific*

ஆசிய - ஐரோப்பா - அவுஸ்ரேலியா - வடமத்திய - தென்அமெரிக்க - உலகின் சகல பாகங்களிற்குமான ரிக்கற் வசதிகளுக்கு நாடவேண்டிய இடம்
J.A.B TRAVELS & TOURS.

1185 DUNDAS ST. E., # 203 MISSISSAUGA ON
(905) 896-8320





எதற்காக?

'ஏன்? தேவையே இல்லையே'!

பிந்தி விட்டீர்களா?

முற்றிலும் இலவசம்!
2001 வருமான வரி
LIBERTY INCOME TAX
2379 Eglinton Ave. E. (at Kennedy) 416-750-0039
3573 Sheppard Ave. E. (at Birchmount) 416-297-7473
முற்றிலும் இலவசம்!

**LIBERTY INCOME TAX**
உடனடி வருமான வரி மீளளிப்பு இல்லம்

Scarboroughல்
2379 Eglinton Ave. E. (Kennedy சந்திப்பில்) 416-750-0039

3573 Sheppard Ave. E. (Birchmount சந்திப்பில்) 416-297-7473

February ல் இருந்து திறக்கப்படும் கிளைகள்:
WAL*MART - Agincourt 416-297-7473
WAL*MART - Scarborough Town Centre 416-297-7473



# ஆரோக்கிய வாழ்வு

N. செல்வசோதி




## முதுகுத்தண்டு,கழுத்துவலி யோகசிகிச்சை

மனித உடலின் ஆரோக்கியத்தின் முதுகுத் தண்டின் இயக்கம் மிகவும் முக்கிய இடத்தை வகிக்கிறது. முதுகெலும்பின் சில மூட்டுகள் மிக இறுக்கமாகவும் சில மூட்டுகள் மிகவும் மெதுமையாகவும் இருக்கும் இந்த நிலையில் இறுக்கமாக இருக்கும் மூட்டுகளுக்கே முன்னுரிமையளித்து சிகிச்சை அளிக்க வேண்டும்.

**வளைந்த முதுகு**

சிலருக்கு முதுகெலும்புத் தண்டு, கழுத்துப் பகுதி மார்புப் பகுதி, இடுப்புப் பகுதி மேலிருந்து கீழாக வளைந்திருக்கலாம்.



இதற்குக் காரணம் உடம்பின் அப் பகுதியிலுள்ள தசை நார்கள் சில அதிகம் நீண்டும் சில குறைவாக நீண்டும் இருப்பதுதான். ஆனால் ஒரு முதுகெலும்பு அதற்கு மேலுள்ள அல்லது அதற்குக் கீழுள்ள முதுகெலும்பை விட்டு சற்று விலகிவிட்டால் கோளாறுகள் ஏற்படும் என்று கூறுவது மிகவும் தவறு.

**திடீர் முதுகெலும்புத் தண்டு வலி**
(sudden spinal pain)

திடீர் முதுகெலும்புத் தண்டுவலி கழுத்து அல்லது இடுப்புப் பகுதியில் ஏற்படும். சில சமயம் மார்ப்புப் பகுதியிலும் ஏற்படும். இதற்கு எந்தக் காரணமும் இருக்காது அப்படி இருந்தாலும் அது மிக அரிதாகவே இருக்கும். இவ் வலி முதலில் சிறிதறவு ஏற்பட்டு பின்னர் மிக மிக அதிகமாகி நம்மை அசையக் கூட முடியாமல் ஆக்கிவிடும். படுத்திருக்கும் போதும், அசையாதிருக்கும் போதும் வலி குறைந்து காணப்படும். ஆனால் உடலை சற்று அசைத்து வளைக்கும் போது வலி அதிகரிக்கும். இந்த வலி முதுகெலும்புத் தண்டில் ஓர் இடத்தில் உண்டாகி பின் எல்லா இடத்திற்கும் பரவும். முதுகு வழியாக விலா எலும்புகளில் பரவி தோள்பட்டை வரையில் இதன் தாக்கத்தை ஏற்படுத்தும். இருமினால், தும்மினால் சிறிது அழுத்தமாகச் சுவாசித்தால் கூட இவ்வலி அதிகரிக்கும். பின் 4 அல்லது 5 நாட்களின் பின் சிறிது சிறிதாகக் குறைந்து போகும். ஆனால் இவ்வலி சில நாட்களின் பின்போ அல்லது சில மாதங்களின் பின்போ திரும்பவும் வரலாம் காலப்போக்கில் இந்த வலி நாட்களின் இடைவெளி குறைந்து அடிக்கடி வர வாய்ப்பு உண்டு.

ஆனால் இன்னொரு விதமாக வலி முதுகெலும்புத் தண்டில் ஏற்பட்டு புஜங்கள், மார்பு, வயிறு, அரைப் பகுதி, தொடைகளுக்கும் விரைந்து பரவும், பின் முதுகு வலி குணமாகிவிடும். ஆனால் பிற பகுதிகளில் வலி அதிகமாக இருக்கும்.

இடம்பெயர்ந்த சதை வட்டுக்கள் (Displace Dics)

முதுகு வலிக்கு முக்கிய காரணம் சதை வட்டுக்கள் இடம்பெயர்வதேயாகும். உண்மையில் அவை இடம்பெயர்வதில்லை. உண்மையில் அவை வீங்குகின்றன. இதனால் அதில் அழுத்தம் அதிகரிக்கின்றது. இதனால் தசைகள் இறுகிப்போய் இயக்கமற்றுப் போய் வலி அதிகரிக்கின்றது. வலி அதிகரிப்பதால் நரம்புப் பிடிப்போ, சதை பிடிப்போ ஏற்படலாம். அதிக சுமையை அடிக்கடி தூக்கி வேலை செய்பவர்களுக்கு முதுகுத்தண்டின் வளைவு அதிகமாகும். அப்போது தசை வட்டு (Dics) பாதிக்கப்பட்டு வலி ஏற்படும்.

தசை வட்டின் (Dise) மையம் பகுதியை அழுத்தத்திலிருந்து விடுவித்துவிட்டால் வலி தானாகவே குணமாகிவிடும். இடம்பெயர்ந்த சதை வட்டுகள் (Displaced Dise) சரியான முறையில் பின்பு இருந்த இடத்திற்கு வருவதற்கு யோக சிகிச்சை முறைதான் தகுந்த வழி. இதற்கு பதினெட்டு நிலைகளைக் கொண்ட (பவனமுத்தாசனம்) என்ற யோகாசனத்தின் ஒரு பயிற்சி முறைதான் பெருந்துணையாயிருக்கிறது. இந்த பயிற்சியின் விபரத்தை இங்கு விபரிப்பது கடினம். இதனை ஒரு யோகாசன ஆசிரியரின் உதவியுடன் செய்து வருவது நன்று. இதைப்பற்றி அறிய என்னுடன் தொடர்பு கொள்வதற்கு விரும்பினால் "விளம்பரம்" தொலைபேசி இலக்கத்தில் உங்கள் குறிப்பை பதிவு செய்தால் நான், உங்களை அழைப்பேன்.

**பிற யோக சிகிச்சை முறைகள்**
**(கழுத்து - முதுகு)**



1. வலி வந்த இடத்தில் காலை மாலை ஐஸ் கட்டியை 5 நிமிடங்கள் வைப்பதால் உடனடி நிவாரணம் கிடைக்கும்.
2. 18 நிலைகளைக் கொண்ட பவனமுத்தாசனம் முக்கியமானது.
3. பட்சிமொத்தாசனம் (forward bend)
4. இதன் எதிர்மறை ஆசனம் - பானம் (Bridge)
5. சக்கராசனம் (wheel)
6. பிறையாசனம் (Star)

இவற்றை காலையும் மாலையும் குறிப்பிட்ட நேரம் செய்வதுடன் சில நாட்களின் பின் நேரத்தை அதிகரிக்க வேண்டும். பின்பு வலி குறைந்து கொண்டுவரும் போது பயிற்சியைக் குறைத்துக் கொள்ளலாம்.


TELUS mobility




Special Offer

உங்கள் சகலவிதமான செலுலர் போன் தேவைகளுக்கும் தமிழில் உரையாட அழையுங்கள்.

Tel : 416-288-6451

* HOME DELIVERY AVAILABLE

உதிரும் தலைமுடிக்கு புத்துயிர் அளியுங்கள்

RENEWAL Hair Care

குறிப்பு: வழுக்கைத் தலை உள்ளவர்களுக்கு இம்மருந்து பிரயோசனமற்றது.




கீழ்காணும் பிரச்சினைகள் ஏதாவது உங்களுக்கு உண்டா?

- தலைமுடி உதிர்தல், சொடுகு, எண்ணைத்தன்மை?
- தலைமுடியின் அடர்த்தி, பளபளப்புத் தன்மை குறைகின்றதா?

416-629-6648

RENEWAL Hair Care



## ஸ்ரீலங்கா அணிக்கு உயிர்நாதமே! தமிழன்!!

# விளையாட்டுத் தகவல்கள் - 115
# கிரிகெட்

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக பல வெற்றிகளைக் குவித்து வந்த ஸ்ரீலங்கா கிரிகெட் அணி கடந்த நான்கு மாதங்களாக பெருந் தோல்விகளைக் கண்டது. இதற்குப் பல நொண்டிச் சாட்டுகளை ஸ்ரீலங்கா அணி கூறியபோதிலும், உண்மைக் காரணம் முரளிதரனின் பங்களிப்பு இன்மையே ஆகும். இதை நிருபிக்கும் முகமாக தென் ஆபிரிக்காவில் பல தோல்விகளைக் கண்ட ஸ்ரீலங்கா அணி தற்போது அவுஸ்திரேலியாவில் நடைபெறும் VB தொடர் போட்டிகளில் முதல் மூன்று ஆட்டங்களிலும் இங்கிலாந்துடனும் அவுஸ்திரேலியாவுடனும் படுதோல்வி அடைந்தது. சத்திர சிகிச்சையின் பின்பு சுகமடைந்து திரும்பி களம் இறங்கிய முரளிதரன் பந்து வீசிய முதல் ஆட்டத்திலேயே அவுஸ்திரேலிய அணியை மண்கவ்வ வைத்துள்ளார். ஜனவரி 9ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தின் பின்பு அவுஸ்திரேலியா ஒரு தின ஆட்டத்தின் அணித் தலைவரான Ricky Ponting கருத்துத் தெரிவிக்கையில் உலகத்திலேயே, தான் இதுவரை கண்டிராத World Best Bowler முரளிதன் தான் என்று கூறியுள்ளார். அதுமட்டுமல்லாமல் முரளிதரன் மைதானத்தில் இருக்கும் போது வீரர்களுக்கு உளரீதியாக ஒரு புது உத்வேகத்தை ஏற்படுத்திவிடுவார் என்று தெரிவித்துள்ளார். ஆட்டத்தின் கதாநாயகன் விருதை அணித்தலைவர் ஜெயசூரியா வென்ற போதிலும் விருது வைபவத்தில், ஜெயசூரியா ஸ்ரீலங்கா அணியை எக்கணமும் வெற்றியின் பாதையில் திசை திருப்பக் கூடியவர் முரளிதரன் ஒருவரே என்று கூறியுள்ளார்.

ஜனவரி 9ஆம் திகதி அவுஸ்திரேலிய மண்ணில் வைத்தே அவுஸ்திரேலியாவை மண்கவ்வச் செய்த ஸ்ரீலங்கா அணி ஒரு சில சாதனைகளையும் படைத்துள்ளது. ஒருதின ஆட்டங்களில் அவுஸ்திரேலியாவிற்கு எதிராக அதிக பட்ச - 343 ஓட்டங்கள் என்ற சாதனையையும், கடந்த மார்ச்சில் தென்ஆபிரிக்க அணி அவுஸ்திரேலியாவிற்கு எதிராக 326 ஓட்டங்களை அவுஸ்திரேலியா அணிக்கு எதிராக எடுத்த அதிக பட்ச ஸ்கோர் என்ற சாதனையை ஸ்ரீலங்கா அணிக்கு எதிராக 343 ஓட்டங்கள் எடுத்து முறியடிந்து உள்ளது. இத்துடன் முதல் விக்கெட் Partner Ship ஆக அத்தபத்துவும் ஜெய சூரியாவும் சேர்ந்து 237 ஓட்டங்களை விக்கெட் எதுவும் இழப்பில்லாமல் எடுத்து, ஒரு தின ஆட்டங்களில் ஸ்ரீலங்கா அணி ஒவ்வொரு விக்கெட்டுக்கும் எடுத்த அதிகபட்ச தொகையும் இதுவாகும் என்ற சாதனையும் படைத்துள்ளது.



**ஆட்டவிபரம்:** முதலில் களம இறங்கிய ஸ்ரீலங்கா அணி 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 343 ஓட்டங்களை எடுத்து இதில் ஜெயசூரியா 105 பந்துகளில் நான்கு சிக்ஸர் களும், 12 பவுண்டரிகளும் எடுத்து 122 ஓட்டங்களை விளாசித் தள்ளினார். இவருக்கு ஜோடியாக அத்தபத்து 101 ஓட்டங்களையும் ஜெயவர்த்தனா 37 ஓட்டங்களையும் எடுத்தனர். அவுஸ்ரேலியா சார்பாக பந்து வீச்சில் Watson 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார். அடுத்து களம் இறங்கிய அவுஸ்திரேலிய அணி 49.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 264 ஓட்டங்களுடன் தன்னை சுருட்டிக் கொண்டது. பந்து வீச்சில் முரளிதரன் 2, குணரட்ணா 2, ஜெயசூரியா 4 விக்கெட்டுகளை கைப்பற்றினர். ஆட்டநாயகனாக ஜெயசூரியா தெரிவு செய்யப்பட்டார். இன்னும் நான்கு ஆட்டங்கள் ஸ்ரீலங்காவிற்கு பாக்கி இருக்கின்றன. இந்த VB தொடரில் இங்கிலாந்தையும் அவுஸ்திரேலியாவையும் ஸ்ரீலங்கா அணி வீழ்த்துமா என பொறுத்திருந்து பார்ப்போம். இறுதியாட்டம் மூன்று தரம் (ஆட்டங்களாக) ஜனவரி 23, 25, 27 திகதிகளில் நடைபெற இருக்கின்றது.

**உலக கிண்ணம் 2003**

உலககிண்ண போட்டிகள் தென்ஆபிரிக்காவில் பெப்ரவரி 09ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன என்பது கிரிகெட் இரசிகர்களுக்கு ஒரு இனிப்பான செய்தியாகும். உலககிண்ண போட்டிகளைப் பற்றி அலசி ஆராய அடுத்து வரும் விளம்பர இதழ்கள் தயாராக உள்ளன. இந்த இதழில் சில மறக்க முடியாத கடந்த உலககிண்ணப் போட்டிகளில் அனுபவத்தைப் பார்ப்போம்.

**மலரும் நினைவுகள் 1999 உலககோப்பை: இதய துடிப்பை நிறுத்திய தென்ஆபிரிக்கா Vs அவுஸ்திரேலியா அரை இறுதியாட்டம்**

வெற்றி பெறக் கடைசி ஓவரில் 9 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் அவுஸ்திரேலியாவின் டேமியன் ஃபிளெமிங் வீசிய முதல் 2 பந்துகளை அரங்கமே வியக்கும் வண்ணம் பவுண்ரிக்கு விரட்டினார் தென் ஆபிரிக்காவின் லான்ஸ் குளூஸ்னர். 4 பந்துகளில் ஒரு ஓட்டம் மட்டும் தேவை! 3வது பந்தில் ஓட்டம் எடுக்க முடியவில்லை. ஆனால் அந்தோ பரிதாபம்! 4வது பந்தை குளூஸ்னர் அடித்து விட்டு எதிரே நிற்கும் டொனால்டு வருகிறாரா என்று பார்க்காமல் மறுமுனைக்கு ஓடினார். முதலில் குளூஸ்னரை கவனிக்காமல் பந்தையே கவனித்த டொனால்டு, அநாகரித்து கொண்டு மறுமுனையை அடைவதற்குள் மார்க் வாஹ் எறிந்த பந்தை பிடித்து ரன் அவுட்டாக்கினார் ஃபிளெமிங். இங்கிலாந்தின் எட்பாஸ்டனில் நடைபெற்றி இந்த அரைஇறுதி ஆட்டத்தில் இரு அணிகளும் 213 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க, முந்தைய லீக் ஆட்டத்தில் தென்ஆபிரிக்காவை வென்றிருந்தால் இறுதி ஆட்டத்திற்கு அவுஸ்திரேலியா தகுதி பெற்றது. இறுதிக்குத் தகுதி பெற தென் ஆபிரிக்காவிற்கு கிடைத்த பொன்னான வாய்ப்புப் பறிபோனது. வெற்றி தோல்வியின்றி முடித்த இந்த ஆட்டம் சரித்திரப் புகழ் பெற்றதாக அமைந்தது. உலக கோப்பையில் சமநிலையில் முடிந்த ஓர் ஆட்டம் இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

எஸ். கணேஷ்

மலரும் நினைவுகள் 1992 உலககோப்பை: 4 வீரர்கள் ரன் அவுட்டால் கடைசி பந்தில் ஒரு ரன்னால் இந்தியா தோல்வி

வெற்றி பெறுவதற்கு கடைசிப் பந்தில் இந்தியாவுக்கு 4 ஓட்டங்கள் தேவை. சீறிநாத் பந்தை வீளாச, பந்து பவுண்டரியை கடந்து விட்டது என நினைத்து வெங்கடபதி ராஜு ஆடுகளத்தின் நடுவே இருக்க பந்தை எதிர் பாராத விதமாக தடுத்து விக்கெட் கீப்பர் டேவிட் பூனுக்கு எறிந்தார் ஸ்டீவ் வாஹ். ராஜு ரன் அவுட்டானார். இந்தியா ஒரு ஓட்ட வித்தியாசத்தில் அவுஸ்திரேலியாவிடம் தோற்றது. இந்த ஆட்டத்தில் அசாருதீன், மஞ்சரேக்கர், மனோஜ் பிரபாகர், வெங்கடபதி ராஜு ஆகியோர் ரன் அவுட்டானது இந்தியாவின் தோல்விக்கு காரணமாக அமைந்தது. ஓடி இரண்டு ரன்கள் எடுத்திருக்கக் கூடிய வேளையில் பவுண்டரி என்று நினைத்து ஓடாமல் விட்டதால் வெற்றி கொள்ள வேண்டிய இந்திய அணி ஒரு ஓட்டத்தால் தோல்வியைக் கண்டது.

**மலரும் நினைவுகள் 1975 உலககோப்பை:** பாகிஸ்தான் வெற்றியை பறித்த கடைசி ஜோடி

13 ஓவர்களில் வெற்றிக்கு 64 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் மேற்குஇந்திய தீவுகளின் பந்து வீச்சாளரும் கடைசி ஆட்டக்காரருமான ஆன்டி ராபர்டஸ் களம் இறங்குகின்றார். பாகிஸ்தான் அணி ஏற்கனவே வெற்றி மிதப்பில் ஆழ்ந்திருக்கின்றது. டெரிக் முன்ரே, ராபர்ட்ஸ் வேறு விதமாக சிந்தித்தனர். பாகிஸ்தான் கப்டன் மஜீத்கான் தனது முன்னணி பந்து வீச்சாளாரான சார்பிராஸ், நவாஸ் உட்பட அனைவரையும் பயன்படுத்தியும் இக் கூட்டை உடைக்க முடியவில்லை. ஒரு கட்டத்தில் மேற்கு இந்திய தீவுகள் 203 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்து விட்டது. நம்பிக்கை நட்சத்திரங்களான கிரீனிட்ஜ், காளிச்சரின் அடுத்தடுத்து அவுட்டானார்கள். இந்நிலையில் கடைசி ஜோடியான முன்ரே (61 Notout), ராபர்ட்ஸ் (24 Notout) இணைந்து ஆட்டத்தின் போக்கை மாற்றினார்கள். பாகிஸ்தான் சார்பாக சாகீர் அப்பாய் 31, வாசிம் ராஜா, முஷ்டாக் முகமது இருவரும் அரைச்சதம் எடுத்தனர் பாகிஸ்தான் 7 விக்கெட் இழப்பிற்கு 266 எடுத்தது. மேற்கு இந்தியதீவுகள் 267 ஓட்டங்களை 9 விக்கெட் இழப்பிற்கு எடுத்து கடைசி இரண்டு பந்தில் பாகிஸ்தானை மேற்கு இந்திய தீவுகள் வெற்றி கொண்டது.


தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

ரவி நடராஜா

Accident & Traffic Ticket

(14 Years Insurance Claims Experience)




* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்.
* உரிய இழப்பீடுகள்
* மற்றைய இழப்பீடுகள்
* விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்

(416) 245-6555
2095 Weston Road, Suite 203, Toronto, ON
(416) 755-2801
2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough. ON

NTE AUTO


New Trade Engineering Inc.



ஸ்காபரோவில் 12வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair



SIVABALAN

416.750.1573

என். ரி. இ. ஓட்டோ இங்க்

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH

# அன்புத் தமிழ்



**கவிதையும் இலக்கணமும்**

கவிதைக்கு இலக்கணம் தேவைதானா என்னும் கேள்வி இந்த நூற்றாண்டின் இடைப் பகுதியிலிருந்து கேட்கப்பட்டு வருகின்றது. அதுவும் முக்கியமாக, செய்யுள் அமைப்புகளுக்குரிய இலக்கண விதிகள் எதனையும் பின்பற்றாது சுதந்திரமாக எழுதக் கூடிய புதுக்கவிதை வடிவத்தை விரும்புகின்றவர்களால் அதிகம் கேட்கப்படுகின்றது. கவிஞன் ஒரு சுதந்திரப் பறவை. அவனது உணர்ச்சி வெளிப்பாடுகளுக்கு இலக்கண விதிகள் தடையாக இருத்தலாகாது என்பது இவர்களின் வாதம்.

இலக்கணம் புலவர்களுக்கு எப்பொழுது தடையாக இருந்தது? வள்ளுவர் தாம் கூற வந்த கருத்துக்கள் யாவற்றையும் குறள்வெண்பாக்களிற் கூறவில்லையா? பண்டைய தமிழ் மக்களின் கலை கலாசாரச் செய்திகள் பலவற்றை விளக்கமாக விவரித்த இளங்கோ அடிகளுக்கு இலக்கணம் தடையாக இருந்ததா? அல்லது இராமாயணம் பாடித் தமிழை அழகுபடுத்திய கம்பர் இலக்கணம் பற்றிக் கவலைப்பட்டாரா? இதுவரை காலமும் இல்லாத தடை இப்பொழுது ஏன் வரல் வேண்டும் என்பது மரபு வாதிகளால் எழுப்பப்படும் கேள்வி.

**இலக்கணத்தின் பிறப்பு**

இந்த வாதப் பிரதிவாதங்களுக்கிடையில் கவிதைக்கு இலக்கணம் வகுக்கப்பட்ட காரணம் பற்றிச் சிறிது சிந்தித்துப் பார்த்தல் பயனுடையதாக இருக்கும்.

இலக்கணம் என்பது ஓர் ஒழுங்குபாடு. ஆண்டாண்டு காலமாக மக்கள் மத்தியில் நிலவி வந்த பாடல்களை ஆதாரமாகக் கொண்டு புலவர்கள் செய்யுள்கள் செய்தனர். அவ்விதம் செய்கையில் ஓர் ஒழுங்குபாடு பின்பற்றப்பட்டது. ஒழுங்குபாடான செய்யுள்களால் இலக்கியங்கள் இயற்றப்பட்டன. கல்வித் தேவை கருதி அத்தகைய இலக்கியங்களில் உள்ள ஒழுங்குப்பாடுகள் ஆராயப்பட்டு இது இது இவ்விதம் அமையவேண்டும் என்னும் விதிமுறைகள் தொகுக்கப்பட்டன; மாணவருக்குப் புகட்டப்பட்டன. இத்தகைய விதிமுறைகளே இலக்கணமாகும். இலக்கியத்திலிருந்தே இலக்கணம் பிறந்தது என்பதனை

இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே
எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே

என்னும் அகத்தியம் எடுத்துக் காட்டுகின்றது.

தமிழுக்கும் முதல் இலக்கணம் வகுத்தவர் அகத்தியனார் என்பர். அவருக்கு முன்பும் இலக்கண நூல்கள் இருந்திருக்க வேண்டும் என்று கருதுவாரும் உள்ளனர். அகத்தியத்தில் செய்யுளுக்கு விரிவான இலக்கணம் விளக்கப்பட்டது. அதனையும் வேறுபல நூல்களையும் ஆராய்ந்து தொல்காப்பியர் சுருக்கமான முறையில் செய்யுளுக்கு இலக்கணம் வகுத்துத் தமது இலக்கண நூலின் ஒரு பகுதியாகச் சேர்த்துக் கொண்டார். செய்யுள்களை ஆராய்தே அவர் இலக்கணம் செய்தார் என்பதை செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி
இழைத்த இலக்கணம்....(செய்யுளியல் 235)
என்ற பாவினால் அறியலாம்.

தொல்காப்பியர் வகுத்த செய்யுள் இலக்கணத்தைக் கற்போர்க்கு எளிதானவகையில் பல்காப்பியர் பகுத்துக் கூறினார் என்பர் நச்சினார்க்கினியர். பல்காப்பியருக்குப் பின் வந்தவர் பலர் செய்யுள் இலக்கணம் செய்திருக்கின்றனர். அவை யாவும் காலப் போக்கில் மறைந்தொழிந்தன. அவற்றுள் காக்கைபாடினியம் என்ற நூல் சமணர்களால் பெரிதும் கற்கப்பட்டு வந்தது. அதனைத் தழுவிப் பிற்காலத்தில் அமிதசாகரர் என்னும் சமணர் யாப்பருங்கலம் என்ற நூலை செய்தனர். பின்னர் அதற்கு அங்கமாக யாப்பருங்கலக் காரிகை என்ற நூலையும் இயற்றினர்.

**இலக்கணத்தை மாற்றலாமா/மீறலாமா?**

## கவிஞர் வி. கந்தவனம்

தொல்காப்பியச் செய்யுளியலையும் யாப்பருங்கலக்காரிகையையும் ஒப்பு நோக்குகையில் செய்யுள் இலக்கணத்தில் ஏற்பட்டு வந்த மாற்றங்கள் நன்கு புலப்படுகின்றன. அதாவது, காலத்துக்கு காலம் இலக்கணம் மாற்றம் பெற்றே வந்திருக்கின்றது. அதில் குற்றம் ஒன்றும் இல்லை என்கிறது நன்னூல்:

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே (சொல் 462)

மாற்றங்களுக்கும் இலக்கணத்தில் இடமுண்டு. தமிழ் இலக்கணம் நெகிழ்வுடையது. அதன் நெகிழ்ச்சியே தமிழ் மொழியின் வளர்ச்சி. தமிழ் வளர்ச்சிக்கு உதவாதன கைவிடப்பட்டன. உதாரணமாக, வெண்பா வளர்ச்சியடைய பரிபாடல் கைவிடப்பட்டது. வடமொழி மரபைத் தழுவி எழுதப்பட்ட தண்டியலங்காரத்தில் கூறப்பட்டுள்ள யமகம், திரிபு, மடக்கு முதலாய சொல் அலங்காரங்களும் சித்திரக்கவிகளும் பயனற்றவை என்று அறிஞர்களால் இன்று ஒதுக்கப்பட்டுவிட்டன. கருத்து வெளிப்பாடுகளுக்கு மிகவும் வாய்ப்பான விருத்தப்பா இனங்கள் வளர்த்தெடுக்கப்பட்டன. பெரும் புலவர்கள் செய்த மாற்றங்கள், இலக்கண மீறல்கள் புதிய வளர்ச்சிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. புதிய வளர்ச்சிகளிலும் சில வகை ஒழுங்குபாடுகள் பிறப்பட்டன. பிற்காலத்தவர் அத்தகைய ஒழுங்குபாடுகளை இலக்கணமாக்கினர்.

இவ்விதம் பழைய விதிகள் சில மறைய அவற்றின் இடத்தைப் புதிய விதிகள் நிரப்பி வந்தன. அதாவது, மாற்றங்கள் ஏற்பட்டவிடத்தும் கவிதை உலகம் இலக்கணத்தை முற்றாக நிராகரித்ததில்லை. ஏன்? ஏனெனில் கவிதை ஒரு கலை. இலக்கிய வடிவங்களுள்ளே இணையற்றதாகக் கருதப்படும் கலை. தமிழை வளர்த்தெடுத்த கலை. காலம் காலமாக ஒரு கலை தொடர்ந்து வளர வேண்டுமாயின் அதற்குச் சில விதிமுறைகள் இருத்தல் அவசியமென நம்முன்னோர் கருதினர். அதனால் இலக்கணத்தை அவர்கள் முற்றாக நிராகரிக்கத் துணியவில்லை. (தொடரும்)




**TRAFFIC JAM**

- OVER 80
- DUI / IMPAIRED
- SPEEDING
- CARELESS




- SUSPENSIONS
- ACCIDENT / INJURY CLAIMS

DON'T LOSE YOUR POINTS

For All Your Traffic Violation Matters
call:
SHEETAL JAITLY
TICKETS@TRAFFICJAM.CA
TEL: 416.296.0404
FAX: 416.296.1259
TRAFFICJAM.CA

**யோகா சோதிடம்**

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்
- பலன் பார்த்தல்

416-299-8361

**SAFETY TRUCKS**
**Training School Ltd.**

Training & Trucking

Classes A, D & Z

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது
தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம்
(9ஆம் ஆண்டு)

We Accept Welfare & Unemployment Insurance

வாரத்தில் ஏழு நாட்களும்
பயிற்சிகள் வழங்கப்படும்.




*In Classes*
- 365 (Learning Permit)
- Lock Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

* தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
* One On One Training
* அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

16 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:
YOGAN SOCKALINGAM
Truck Driving போதனாசிரியர்
(905) 793-9546 / (416) 616-5979

250 Summerlea Road, Brampton, ON

# பொங்கல் விழா

முதலாம் பக்கத் தொடர்ச்சி



தொழிலாளர்களும் தொழில் மகத்துவத்தை உணர்த்தும் உழைப்பின் பயனை மகிழந்து கொண்டாடக் கூடிய பெருநாளிது. ஒட்டுமொத்தமாக உலகெங்கும் வாழும் அனைத்துத் தமிழ் மக்களையும் ஒருங்கிணைக்கும் புனித விழா தான் பொங்கல் விழா.

சுற்றம் சூழல் சீரழிவினால் மனித வர்க்கம், பூமியின் முகத்திலிருந்து அழிந்து விடுவார்களென்ற அச்சம் வலுவடைந்து வரும் இக்காலத்தில்; சூரியனையும், பலன் கொடுக்கும் பயிர்களையும், பயன்தரு மிருகங்களையும் நினைவுபடுத்தி விழா எடுத்தல் தமிழ் மக்கள் இயற்கையிலும், பல்லுயிரினங்களிலும் வைத்துள்ள அபார மதிப்பை எடுத்தியம்புகிறது.

பொங்கல் விழா சூரியனுடன் தொடர்பு படுத்தப்பட்டிருக்கிறது. பயிர்கள் வளர சூரிய சக்தி இன்றியமையாதது. சூரியனால் மழை பொழிகிறது; மழையினால் குடியும் சமூகமும் நாடும் செழிக்கிறது. சூரியனால் பயன்பெற்ற உழவர்கள் பாடுபட்டு உழைத்த பயனை சூரியனுக்குப் படைத்து நன்றி கூறுவார்கள்.

தமிழ் பாரம்பரயத்தில் நன்றிக்கடன் செலுத்தும் இப் பண்பு இங்கு முக்கியப்படுத்தப்படுகிறது. உழவர்கள் நன்றி செலுத்தும் நாளாகப் பொங்கல் நாளமைகிறது. நன்றி கூறும் இந்நாள் நாம் இயற்கையிடமிருந்து பெற்ற நலன்களுக்கு மாத்திரமல்ல; எம்மோடு சேர்ந்து இந்த உலகத்தில் வாழும் சக சகோதர சகோதரிகளினதும், பெற்றோர்களினதும் நன்மைகளை மறவாமல் நன்றியோடு நினைவு கூர பொங்கல்விழா அமைகிறது.

பொங்கல் விழா ஒரு அறுவடை விழா. தமிழர்கள் வாழும் தமிழ்நாடு, ஈழம்,

சித்திரா பீலிக்ஸ்

வடகிழக்குப் பருவக்காற்றினால் மழை பெறும் பிரதேசங்கள். புரட்டாதி மாத மளவில் மழை பொழியத் தொடங்கும். நீரைக் கண்டதும் பயிர்கள் வளர்கின்றன. மூன்று மாதத்துக்குள் அதன் பலனைக் காண முடிகிறது. தைத் திங்கள் அறுவடைக்குகந்த காலமாகிறது.


அறுவடை என்பது உழைப்பின் பலன். அதன் பலனை மற்றவர்களோடு பகிர்ந்துண்டு மகிழ்வது பொங்கல் திருநாள். பிறர்நலம் பேணும் மனித நேயக் கருத்தை இவ்விழா தன்னகத்தே கொண்டுள்ளது. உலகெங்கும் பரவியுள்ள தமிழர்கள் தம் உழைப்பின் பயன்களை, திறமைகளை, வளர்ச்சிகளை, செல்வங்களை தாம் மட்டும் அனுபவிக்காமல், தாம் வாழ்ந்த மக்களோடும் பகிர்ந்து வாழ இவ்விழா எமக்கு நினைவுடுத்துகிறது. உருக் குலைந்து, உரிமை இழந்து சிதறி வாழும் தமிழர்கள் மனித நேயத்தோடு தமிழ் ஆன்மீக சத்தியினூடாக ஒன்றிணைய பொங்கல் விழா ஒவ்வொரு புதிய வருடமும் அறை கூவுகின்றது.


வானத்தில் பறப்பது நீங்கள்
வசதிகள் செய்து தருவது நாங்கள்

FLYAIR TRAVEL INC.

நகரில் மிகக்குறைந்த விலையில் விமானப் பயணச் சீட்டுகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

Tel: 416-285-9900
Fax:416-285-9800
e-mail: flyair@bellnet.ca



MINUTEMAN PRESS PRINTING FRANCHISE FOR SALE

TELEPHONE: 416-754-3754

- $100,000.00 - INCLUDES TWO WEEKS TRAINING AT NEW YORK U.S.A.TRAINING VALUE IS $17,500.00 U.S.
- OWNERS REASON FOR SALE IS POOR HEALTH - UNABLE TO CARRY OUT THE BUSINESS REQUIREMENTS.
- YEARLY SALES VARY FROM APPROX. $80,000.00 TO 100,000.00. 5 YEAR LEASE - 3 YEARS LEFT. * FAMILY RUN BUSINESS NO EMPLOYEES.

CLEARANCE SALE CLEARANCE SALE CLEARANCE SALE CLEARANCE SALE CLEARANCE SALE CLEARANCE SALE

CLEARANCE SALE

நியூ சங்கர் அன் கோ

- சுவாமிப் படங்கள்
- சிலைகள்

- C.D
- AUDIO

நத்தார் விடுமுறை தொடக்கம் பொங்கல் வரைக்கும் தொடர்ந்து இருக்கும்


CLEARANCE Sale

புதிய, பழைய சாமி பஜனை C.Dகள் இங்கு கிடைக்கும்.

- சமையல் பாத்திரங்கள்
- அப்பச் சட்டி
- தோசைக்கல்
- புட்டுக்குழல்
- குண்டுதோசை சட்டி







50% OFF

- சிறுவர், சிறுமிகளுக்கான உடுப்புகள்
- பஞ்சாபி
- நக்மா சூட்
- லங்கா சூட்



- Rice Cooker
- Preethi - Mixe
- Ultra Grinder



416-750-2370

New Shankar & Co. 2365 Eglinton Ave., Scarborough, ON. M1K 2M5

CLEARANCE SALE CLEARANCE SALE CLEARANCE SALE CLEARANCE SALE CLEARANCE SALE CLEARANCE SALE

# "கடன் செய்து கொடுப்பதே"

முதலாம்பக்கத் தொடர்ச்சி

**நிரந்தர வருமானம்**

GDS - வரிக்கு முந்திய மொத்த வருமானத்தில் இருப்பிடத்திற்காக மட்டும் செலவழிக்கப்படும் பகுதி - Mortgate Payments (Principle Interest), Property Tax, Heating & Utilities இவற்றுடன் அடங்கும். மொத்த வருமானத்தில் - 32 வீதத்தை (32%) மீறாமல் இந்தத் தொகை இருக்க வேண்டும்.

## N. முருகதாஸ்

TDS - இருப்பிடக் கடன் உட்பட சகலவித கடன்செலவுகளும் இதனுள் அடங்கும். உதாரணமாக GDS, Car Loan, Credit Card and Student Loan Payments. மொத்த வருமானத்தில் 40 வீதத்தை மீறாமல் TDS இருக்க வேண்டும்.

தனித்தனியாக GDS, TDS முறைகளின் கீழ் mortgage தொகை கணிக்கப்பட்ட பின் இரண்டிலும் குறைந்த தொகை கடனாக அனுமதிக்கப்படும்.

1. ஆக மாதாந்த கூடிய பட்ச mortgage payment = $1095
